தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், சென்னை–6
ந.க.எண் 96600/சி2/இ2/2012 நாள் 25.11.2014

பொருள் தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நேரடி நியமனமாக 2010 – 11 மற்றும் 2012–ஆம் ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் அறிவியல் பாட பட்டதாரி ஆசிரியகளாக ( தமிழ்வழி ) மற்றும் சிறுபான்மைமொழி வழி அறிவியல்பாட பட்டதாரி ஆசிரியர்களாக நியமன ஆணை வழங்கப்பட்டவர்கள் – நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்களின் நியமனத்தை முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்குதல் – சார்பு

பார்வை தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியார் தொகுதி ) செயல்முறைகள் ந.க..எண்.96600/சி2/இ1/2012 நாள் 9.12.2012, 10.12.2012, 18.12.2012, 22.4.2013, 26.4.2013 மற்றும் இதே ந.க.எண்ணில் பல்வேறு தேதிகளில் வழங்கப்பட்ட நியமன ஆணைகள்

-----

2010–11 மற்றும் 2012–ஆம் ஆண்டுகளில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் உள்ள அரசு உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள அறிவியல் பாட ( தமிழ் வழி ) பட்டதாரி ஆசிரியர் மற்றும் சிறுபான்மை மொழி வழி பாட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வையில் காணும் இவ்வலுவலக செயல்முறைகள் மூலம் வழங்கப்பட்ட நியமனங்கள் அனைத்தும் நியமன ஆணையில் குறிப்பிடப்பபட்டுள்ள கல்வித்தகுதிகளுக்கான நிபந்தனைகளுக்குட்பட்டு (10+2+3 முறையில் கல்வித்தகுதி இல்லாதவர்கள் மற்றும் பட்டப்படிப்பு சார்ந்த பாடத்திற்கு இணையானதாக இல்லாதவர்களைத் தவிர்த்து) அவ்வாசிரியர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் முறையான நியமனமாக முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது.

ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தெரிவு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்படி ஆசிரியர்களுக்கு தனியாக பணிவரன்முறை செய்ய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கலாகிறது.

இச்செயல்முறை நகல்களை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள சார்ந்த பள்ளிகளுக்கு அனுப்பி வைப்பதோடு, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை செய்யுமாறு, சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

25/11/2014

பள்ளிக் கல்வி இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

26-11-2014

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
(மின் அஞ்சல் மூலம்)

www.kalvikural.com